சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண்.7401/அ5/2022 நாள்.30 .12.2022

பொருள்: பள்ளிக் கல்வி-சென்னை மாவட்டம்- 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு அரையாண்டு தேர்வுகள் - தேர்ச்சி பகுப்பாய்வு விவரங்கள்- நடவடிக்கை மேற்கொள்ளல்- தொடர்பாக.

பார்வை: 1. சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.7401/அ5/22, நாள்.01.12.2022 மற்றும் 16.12.2022

10, 11, மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான அரையாண்டு தேர்வுக்குரிய தேர்ச்சி பகுப்பாய்வு (Result Analysis) குறித்து மாநிலப்பாடத் திட்டத்தின் கீழ் சென்னை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து வகை உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் பின்வரும் விவரங்களின் அடிப்படையில் செயல்பட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) 10, 11 மற்றும் 12ம் வகுப்பு அரையாண்டு தேர்வு தேர்ச்சி பகுப்பாய்வு (Result Analysis) விவரத்தினைஇணைப்பில் காணும் படிவங்களில் (I to XII) எவ்வித விவரங்களும் விடுபடாமல் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து Excel ல் வடிவில் சார்ந்த பள்ளிகளின் ஆய்வு அலுவலர்களான சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலருக்கு 03.01.2023 அன்று மாலை 4 மணிக்குள் இ.மெயில் மூலமாகவும், கையொப்ப பிரதியினை நேரிலும் ஒப்படைத்தல் வேண்டும்.
2) படிவங்கள் Excel வடிவில் Arial font-ல் தயார் செய்திடல் வேண்டும்.
3) தேர்வில் தோல்வியுற்ற மாணவர்கள் சார்பான விவரங்களை 12 ஆம் வகுப்பிற்கு படிவம் IV, 11 ஆம் வகுப்பிற்கு படிவம்VIII மற்றும் 10 ஆம் வகுப்பிற்கு படிவம் XII இல் காணும் விவரங்களின் அடிப்படையில் பள்ளி அளவில் பதிவேடு பராமரித்தல் வேண்டும்.
4) 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு தேர்ச்சி முடிவுகள் சார்ந்து வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களுக்கு மீள் ஆய்வுக் கூட்டம் 03.01.2023 க்குள் தலைமை ஆசிரியர் மற்றும் முதல்வர்களால் நடத்தப்பட வேண்டும்.
5) 6 முதல் 9 ஆம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு தேர்ச்சி முடிவுகள் சார்ந்தும் வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களுக்கு மீள் ஆய்வுக் கூட்டம் நடத்திடல் வேண்டும்.
6) பள்ளிகளிலிருந்து பெறப்படும் தேர்ச்சி பகுப்பாய்வு விவரங்களை பள்ளி வகை வாரியாக ( Management wise) தொகுத்து 04.01.2023 அன்று 3 மணிக்குள் சென்னை முதன்மைக் கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு Excel வடிவில் அனுப்பிடவும் கையொப்பமிட்ட பிரதியினை அன்றே தனிநபர் மூலம் நேரில் சமர்ப்பித்திடவும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு தேர்ச்சி பகுப்பாய்வு சார்பாக சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் 05.01.2023 அன்று தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. (இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்)

8) ஆய்வு அலுவலர்களான அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் தங்கள் அதிகார வரம்பிற்குள் செயல்பட்டு வரும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் அரையாண்டு தேர்வு தேர்ச்சி பகுப்பாய்வு கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட கேட்டுக்கொள்வதுடன் வருகைப் பதிவேடு பராமரித்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு- படிவங்கள்

I to IV – 12 STD
V to VIII – 11 STD
IX to XII – 10 STD

இரா.சு. மார்ஸ்லின் 30/12/22
முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை

30/12/22

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் , சென்னை மாவட்டம்.
2. அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் (மாநிலப் பாடத் திட்டம்)

நகல்

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-06 தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம்,சென்னை-06. தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. துணை ஆணையர், சென்னை பள்ளிகள், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. கல்வி அலுவலர், சென்னை பள்ளிகள், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03 தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.